# பிளேட்டோவின் கலை, அழகியற் சிந்தனைகளும் சமகால உலகில் அவற்றின் பொருத்தப்பாடும்

**பிறிஸ்கா, பி., நிரோசன், சி., திலீபன், தி.**

மெய்யியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

priskafrancis0@gmail.com

*மெய்யியலில் கலை, அழகியல் குறித்துக் காலத்துக்கு காலம் பல்வேறுப்பட்ட வகையில் அறிஞர்கள் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்தி வருகின்றனர். அந்தவகையில் கிரேக்க சிந்தனையாளரான பிளேட்டோ கலை, அழகியல் பற்றிய தனது சிந்தனைகளை வெளிப்படுத்தி வழங்கியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இதன்படி கலைகளை உண்மைப் பொருளின் விம்பமாகக் கருதுவது மட்டுமன்றி உண்மை மற்றும் அழகுடன் ஒழுக்கத்தினை இணைத்துப் பார்ப்பதனூடாக உணர்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கலைகளையும் கலைஞர்களையும் பற்றிப் பேசுகிறார். மேலும் மனித உணர்ச்சிகளைத் தூண்டும்வகையில் கலைகளை உருவாக்கும் கலைஞர்களை ஒழுக்கத்திற்கு முரணானவர்களாகக் கருதி, அவ்வாறான கலைஞர்களை நாடுகடத்த வேண்டும் என்கிறார். இவ்வாறு பிளேட்டோவின் நோக்கில் கலைகள் எப்பொழுதும் சமூகநன்மை என்கின்ற இலட்சிய நோக்கை அடிப் படையாகக் கொண்டதாக செயற்பட வேண்டுமெனவும் அவை ஒழுக்கத்தைப் போதிப்பன வாக அமைய வேண்டுமெனவும் கருதுகிறார். இருப்பினும் இன்றைய நவீன உலகில் காணப் படும் கலைப்படைப்புகளான கவிதை, இசை மற்றும் ஓவியம் போன்றவை ஒழுக்கம் மற்றும் கலாசார எல்லைகளைக் கடந்து தமது அடையாளம், பிரதிநிதித்துவம் மற்றும் பன்முகத் தன்மை என்பவற்றை மையப்படுத்தி உருவாக்கப்பட்டவையாக அமைகின்றன. இவ்வகைக் கலைகளில் பிளேட்டோவின் சிந்தனைகள் பிரதிபலிக்கின்ற தன்மைகளைத் தெளிவுபடுத்து வதோடு, அவரது கருத்துக்களை உள்வாங்கியவாறான போக்கில் சம காலக் கலைகள் அமைவதனைத் தெளிவுபடுத்துவதாகவும் இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த வகையில் இன்றைய சமகால உலகில் இலாப நோக்கத்திற்காகவும் ஏனைய நோக்கங்களுக் காகவும் உருவாக்கப்படும் கலைகள் பற்றிய சிந்தனைகளுடன் பிளேட்டோவின் சிந்தனைகள் எவ்வகையில் பொருத்தப்பாடுடையவையாக விளங்குகின்றன என்பது ஆய்வின்மூலம் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. மேலும் பிளேட்டோ விட்டுச்சென்ற கலை, அழகியல் பற்றிய கருத்தாக்கங்கள் இன்றைய காலகட்டத்திற்கு பொருத்தமுடையதா? இல்லையா? என்பதும் வெளிக்கொணரப்பட்டுள்ளது. இன்றைய கலையுலகில் புதிய நுணுக்கங்களும் நுட்பங்களும் உள்வாங்கப்பட்டாலும், ஒழுக்கவியலைப் பொறுத்தவரையில் பிளேட்டோவின் சிந்தனை கள் மீள்வாசிப்புக்குட்படுத்தப்பட்டு பின்பற்றப்படலின் அவசியமானது முடிவாகப் பெறப் பட்டுள்ளது. அத்தோடு ஒழுக்க செயன்முறைகளை நடைமுறைப் படுத்தும் வகையிலான அமைப்புக்கள் உருவாக்கப்பட வேண்டும் என்பதும் வலியுறுத்தப் பட்டுள்ளது. இவ்வகை யில் பிளேட்டோ வின் சிந்தனைகளை அறிந்துகொள்ளும் பொருட்டு இரண்டாம் நிலைத் தரவுகள் இலக்கியங்களிலிருந்து பெறப்பட்டுள்ளதோடு, வரலாற்று ரீதியான அணுகு முறைகளை அடிப்படையாகக் கொண்டு தரவுகள் சேகரிக்கப்பட்டு, ஒப்பீட்டு ரீதியாக ஆய்வு செய்து பெறப்பட்ட பெறுபேறுகள் விமர்சனப் பகுப்பாய்விற்கு உட்படுத்துகின்றன.*

**திறவுச்சொற்கள்:** ஒழுக்கம், கலைப்பண்பு, சமூக நலன், பொது நன்மை, கலை இயக்கங்கள்